**மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**எம்.சி.ஓ.பி.எண்.291/15, 295/15 நாள்.10.11.2022**

2022-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ம் நாள் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செந்தில்குமார் | தொழில் | |
| த.பெ/க.பெ. | சிவகுரு | சாதி | |
| கிராமம் | வெள்ளிமேடுபேட்டை | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 39 |

**2ம் மனுதாரர் தரப்பு எ.சா.3**
**முதல் விசாரணை**

நான் வெள்ளிமேடு பேட்டையில் காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். 08.07.2015ம் தேதியில் இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 06.07.2015 தேதியில் நடந்ததாக புகார் கொடுக்கப்பட்டது. புகார் முனுசாமி, த/பெ.ஆண்டி என்பவர் புகார் கொடுத்துள்ளார். ம.சா.1 முதல் தகவல் அறிக்கை எங்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டதுதான். முனுசாமி, முருகன் மற்றும் பார்த்திபன் ஆகியோர் டிஎன் 32 டி 9356 என்ற இருசக்கர வாகனத்தை பார்த்தின் என்பவர் ஓட்டி சென்றபோது மற்ற இருவரும் பின்னால் அமர்ந்து சென்றார்கள். எதிரில் வந்த டாடாஏசி டிஎன் 07 ஏஆர் 8873 என்ற வாகனம் விபத்தை ஏற்படுத்தியதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி முனுசாமி, முருகன் மற்றும் பார்த்திபன் ஆகியோரை விசாரித்து இறுதிஅறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி நபர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நபர்களின் வாக்குமூலத்தின் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்கிறேன். அவை எ.ம.சா.2 ஆகும். விபத்தில்

சம்பந்தப்பட்ட இரு சக்கர வாகனம் மட்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. விபத்திற்கு டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுனர் காரணம் இல்லை என்பதால் டாடா ஏசி வாகனம் மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தவில்லை. இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் அவராகவே கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்று தெரியவந்ததால் புகார் பிழையுடையது என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்யபட்டுள்ளது. விபத்திற்கு இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் தான் காரணம் என்று இருசக்கர வாகனத்தில் சென்ற 3 நபர்களும் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். வழக்கு பிழையுடையது என்று இறுதி அறிக்கை தாக்கல் செய்தது சம்பந்தமாக புகார்தாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வழக்கு விபத்து சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.3 ஆகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கின் புலன் விசாரணையை சிறப்பு உதவி ஆய்வாளர் கணபதி மற்றும் உதவி ஆய்வாளர் சந்திரசேகர் ஆகியோர் செய்துள்ளார்கள். 10.07.2015ம் தேதியில் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்துள்ளார்கள். மோட்டார் வாகன ஆய்விற்கு 05.08.2015 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. விபத்து நடந்த தேதி 06.07.2015 ஆகும். விபத்தில் காயம் பட்ட முனுசாமி என்பவர் 2 நாள் கழித்து கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. 06.07.2015 அன்று டாடா ஏசி வாகனத்தின் உரிமையாளர் கோபிநாதன் என்பவர் தன் மீது தவறு இல்லை என்று மனு கொடுத்துள்ளார். அந்த மனு மீது நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணம் எதுவும் கோப்பில் இல்லை. புகார்தாரருக்கு 10.07.2015 தேதியில் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. ஆர்.டி.ஓ-விடம் 10.07.2015 அன்று வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. ஆனால் மோட்டார் வாகனத்தை ஆய்வு செய்ய 05.08.2015 அன்று கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. விபத்தில் சம்பந்தப்பட்ட டாடா ஏசி வாகனத்தை

மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பவில்லை. ஆர்.டி.ஓ வாக்குமூலத்தில் வாகனத்தின் எண் அழிக்கப்பட்டு மீண்டும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் புலன் விசாரணை செய்தவர்கள் எந்த சாட்சியையும் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.